**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர்.**

**முன்னிலை : திரு.ஆர்.புவனேஷ்குமார் B.A., L.L.B (Hons), L.L.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**கடலூர்.**

2026- ம் ஆண்டு ஜுலை மாதம் 28-ஆம் நாள் செவ்வாய்கிழமை
திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம் ஆடி 12-ம் நாள்
CNR. No. **TNCD06-001508-2025**
ஆண்டுபட்டிகை **வழக்கு எண்.73/2025**

காவல் உதவி ஆய்வாளர்
கடலூர் புதுநகர் காவல் நிலையம்
குற்ற எண். 835/2022 ....குற்றமுறையிடுபவர்

.. எதிர் ..

*1*) பழனியம்மாள் க/பெ. லக்ஷ்மணன்
2) தனசேகர் த.பெ லக்ஷ்மணன்

.... எதிரிகள்

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற **07.04.2021** நாளிட்ட
**R.O.C.No. 814/2020/RG/F1 (P.Dis.No. 36/2021)** உத்தரவு மற்றும் **Rule 106 Cr.R.P.-**ன்படி
**CASE SUMMARY**

| | | | |
|---|---|---|---|
| i) The Period of Remand of the Accused: | Date of Remand | Date of surrender | Released on Bail |
| | A2- 07.10.2022 | | 12.10.2022 |
| | | A1- | 07.06.2019 |
| | | | |
| ii) Date of filing of the Complaint / Final report in the Court | Filing of complaint | Filing of Final Report | |
| | 05.10.2022 | 07.10.2022 | |
| iii) The date of questioning of the Accused U/s.241 of the Criminal Procedure Code | 11.06.2025 | | |

| | | | |
|---|---|---|---|
| v) Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except routine petitions like petitions U/s. 317 of CrPC | Crl.M.P.No. | Date of Filing | Result |
| | U/s.320 of Cr.P.C | 17.07.2026 | Dismissed |
| | U/s. 311 of Cr.PC | 22.07.2026 | Allowed |
| v) Date of examination in-chief and cross-examination of a witness | Name of the Witness | Date of Chief | Date of Cross |
| | 1. திரு.அபிமன்யு | 15.07.2026 | 15.07.2026 |
| | 2. திரு. சந்திரசேகர் | 15.07.2026 | 15.07.2026 |
| | 3. திரு. வீரப்பன் | 15.07.2026 | 15.07.2026 |
| | 4. திருமதி. வெண்ணிலா | 15.07.2026 | 15.07.2026 |
| | 5. திரு. வடிவேல் ( சிறப்பு உதவி ஆய்வாளர்) | 22.07.2026 | 22.07.2026 |
| vi) Date of examination of the Accused U/s.313(1)(b) Cr.P.C. | 27.07.2026 | | |
| vii) Details of abscondance of an Accused and his appearance / production, as the case may be; and | Nil | | |
| viii) Grant of stay by sup1erior Courts and the results there of: | Nil | | |

<u>Particulars u/s.106 of Criminal Rules of Practice, 2019 (Form 61)</u>

| | | |
|---|---|---|
| 1 | Name of the police station and crime number of the offence | NT PS<br>Cr.No: 835/2022 |
| 2 | Description of the accused:<br>Name:<br>Father’s name:<br>Occupation:<br>Residence:<br>Age: | 1) Pazhaniyammal W/o. Lakshmanan<br>2) Chandrasekar S/o Lakshmanan<br><br>Residing at:<br>Panankattu Colony, Cuddalore. |
| 3 | Date of occurrence | 04.10.2022 |
| 4 | Date of Complaint | 05.10.2022 |
| 5 | Date of Apprehension | A1- 19.10.2022 A2- 07.10.2022 |
| 6 | Date of Release of Bail | A1- 19.10.2022 A2- 12.10.2022 |
| 7 | Date of Commitment | Not applicable |

| | | |
|---|---|---|
| 8 | Date of Commencement of trial | 15.07.2026 |
| 9 | Date of Closure of Trial | 22.07.2026 |
| 10 | Date of Sentence or Order | 28.07.2026 |
| 11 | Date of service of copy of judgment or finding on accused | Not applicable, since acquittal |
| 12 | Explanation of delay | No delay |

இவ்வழக்கானது 30.01.2015 ந் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 28.07.2026 தேதி இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் திரு.M.யோகேஷ் **B.Com., B.L., (Hons), L.L.M.,** அவர்களும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.P.காத்தவராயன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

அரசு தரப்பு வழக்கு யாதெனில், இவ்வழக்கு சங்கதிகளின் நிகழ்நிலை புகார்தாரரான சாட்சி 1 அபிமன்யு என்பவருக்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் இடம் சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்த நிலையில் 04.10.2022 ந் தேதி காலை 09.00 மணிக்கு சாட்சி விஜயபாரதி என்பவர் வீட்டின் எதிரில் இருந்த விறகுகளை அப்புறப்படுத்தி செட நட முயன்றபோது, எதிரிகள் அனைவரும் சாட்சிகளைப் பார்த்து கண்ட தேவடியா எல்லாம் செடி நடுவா நான் பார்த்துக்கிட்டு இருக்கணுமா என்று அசிங்கமாக திட்டி, சத்தம் கேட்டு வீட்டிலிருந்து வெளியே வந்த 2 வது எதிரி சாட்சி-1 ஐ பார்த்து டேய் ஓத்தா, தேவடியாபையா எங்க அம்மாகிட்டயே எதிர்த்து பேசுறியா என்ற அசிங்கமாக திட்டி கொண்டு தன் கையில் இரந்து வீச்சருவாளால் சாட்சி-1 ஐ வெட்டி முயன்றும் அப்போது தடுக்க வந்த அபிராஜவர்மன் என்பவரை பார்த்து 2 வது எதிரி என்பவர் வாடா தேவடியாபையா உங்களை குடும்பத்தோடு வெட்டி வீட்டோடு வைத்து புதைத்து விடுகிறேன் என்று கொலை மிரட்டல் விடுத்தும், சாட்சிகளை பார்த்து இனிமேல் நீங்கள் இந்த தெரு பக்கமே போகக்கூடாது என்று தடுப்பு கட்டை கட்டி சாட்சிகளை வீட்டை விட்டு வெளியே வரமுடியாமல் தடுத்தும் எதிரி சந்திரசேகர் என்பவர் தன் கையில் இருந்த வீச்சருவாளை காட்டி இதாலேயே உங்களை வெட்டி கொன்றுவிடுகிறேன் என்று கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளார்கள் என்று கடலூர் புதுநகர் காவல் ஆய்வாளர் 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294 (பி) ன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294 (பி), 342, 506(2) ன் கீழும், குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3)** வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையான எதிரிகளுக்கு பிரிவு 207 of Cr.PC -ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது, எதிரிகளுக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

**4) குற்றச்சாட்டு :-**

எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு, எதிரிகளிடம் அவர்கள் மீதான குற்றங்கள் குறித்து வினவியபோது எதிரிகள் தங்கள் குற்றத்தை மறுத்தார் எதிரிகள் தன் குற்றத்தை மறுக்கவே வழக்காவணங்களை பரிசீலனை செய்து பார்த்தபோது அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றத்திற்கு போதுமான ஆதாரங்கள் இருப்பதாக இந்நீதிமன்றத்தால் கருதப்பட்டு, 1 வது எதிரியிடம் இதச பிரிவுகள் 294 (பி) ன் கீழும், 2 வது எதிரியிடம் இதச பிரிவுகள் 294 (பி), 342, 506(2) ன் கீழும், குற்றச்சாட்டுகள் வனைந்து, தமிழில் படித்துக்காட்டி விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று கூறினார்கள்.

**5)** அரசுத்தரப்பில் 1 முதல் 12 வரையான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுபொருட்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

வழக்கு விசாரணைக்கு முன் எதிரிகள் மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் பிரிவு 320 of Cr.P.C-ன் படி சமரச மனு தாக்கல் செய்யப்பட்டது இதச பிரிவுகள் 294(b), 506(2) -ன் படியான குற்றங்கள் சமரசம் செய்து கொள்ள முடியாத குற்றங்கள் என்பதால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**6) அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

அ) **அ.சா.1 /அபிமன்யு /** புகார்தாரர் தனது முதன்மை விசாரணை சாட்சியத்தில், கடந்த 04.10.2022 அன்று காலை 09.30 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபோது, அங்கு கூட்டமாக இருந்தது அதில் யாரோ என்னை அசிங்கமாக திட்டி, கொலை மிரட்டல் விடுத்தனர் என்றும் அந்த கூட்டத்தில் எதிரிகள் இருந்ததாலும், எதிரிகளுடன் இருந்த முன்விரோதம் காரணமாகவும், அங்கிருந்தவர்கள்

சொன்னதன் பேரிலும், ஒரு அனுமானத்தின் எதிரிகள் மீது புதுநகர் காவல் நிலையத்தில் புகார் மனு அ.சா.ஆ.1 கொடுத்ததாகவும், பின்னர் விசாரித்ததில் எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்க்கும் எந்த சம்மந்தமில்லை என்று தெரிந்து வந்தது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**ஆ) அ.சா.2 /சந்திரசேகர்** / தனது முதன்மை விசாரணை சாட்சியத்தில், இந்த வழக்கை பற்றிய விவரம் ஏதும் தனக்கு தெரியாது என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**இ) அ.சா.3 /வீரப்பன்** / தனது முதன்மை விசாரணை சாட்சியத்தில், இந்த வழக்கை பற்றிய விவரம் ஏதும் தனக்கு தெரியாது என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**ஈ) அசா.4 / வெண்ணிலா**/ தனது முதன்மை விசாரணை சாட்சியத்தில், இந்த வழக்கை பற்றிய விவரம் ஏதும் தனக்கு தெரியாது என்றும், போலிசார் சம்மன் கொடுக்கும்போது தான் எனக்கு இந்த வழக்கை பற்றி தெரியும் என்றும், நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**உ) அசா.5/திரு.வடிவேல் சிறப்பு உதவி ஆய்வாளர்** தனது முதன்மை சாட்சியத்தில் தற்போது புதுநகர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், தன்னுடன் பணிபுரிந்த திரு.அருள் தலைமை காவலர் மற்றும் திரு. கதிரவன் உதவி ஆய்வாளர் ஆகியோரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் தனக்கு நன்கு பரிச்சயம் என்பதாலும் இவ்வழக்கின் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 05.10.2022 ம் தேதி தலைமை காவலர் திரு.அருள் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது, பனங்காட்டு காலணியைச் சேர்ந்த தங்கரத்தினம் மகன் அபிமன்யு கொடுத்த புகார் மனுவைப் பெற்று அன்றைய தினமே கடலூர் புதுநகர் காவல் நிலைய குற்ற எண் 835/2022 சட்ட பிரிவுகள் 294(பி), 342, 506(2) இதசாவாக முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 2 பதிந்தார் என்றும், பின்னர் வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தார் என்றும், வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக எடுத்துக் கொண்ட திரு.கதிரவன் உதவி ஆய்வாளர் அவர்கள் தனது விசாரணைக்கு

எடுத்துக்கொண்டு, அன்றைய தினமே 13.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று, சம்பவ இடத்தை பார்வையிட்டு, சம்பவ சாட்சிகள் வெண்ணிலா மற்றும் செல்வநாயகி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் அ.சா.ஆ.3 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.4 தயாரித்து வாக்குமூலம் பெற்றார் என்றும், பின்னர் இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகளான விஜயபாரதி, அபிராஜவர்மன், வீரப்பன், சந்திரசேகர் மற்றும் பிரகாஷ் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பெற்றார் என்றும், பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் 07.10.2022 அன்று 10.00 மணிக்கு கடலூர் பனங்காட்டு மாரியம்மன் கோவில் அருகே நின்று கொண்டிருந்த 2 வது எதிரியை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் காவியா மற்றும் பரமேஸ்வரி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தாங்கள் எதனுடன் வந்தால் தான் சம்பவத்திற்க்கு பயன்படுத்திய வீச்சருவாளை வைக்கப்போரில் இருந்து எடுத்து தங்களிடம் ஆஜர் படுத்துவேன் என்று கூறினார் என்றும், அதன் பேரில் வீச்சருவாளை கைப்பற்றுதல் மகஜரில் அதே சாட்சிகளான காவியா மற்றும் பரமேஸ்வரி ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி மற்றும் கைப்பற்றுதல் மகஜர் முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 என்றும், பின்னர் இவ்வழக்கின் இறுதி விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக சட்ட பிரிவுகள் 294(பி), 342, 506(2) இதசாவின் கீழ் 07.10.2022 அன்று குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார் என்று ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார்.

**7)** இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**8)** அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரிகள் அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றார்கள், எதிரிகள் தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**9) விவாதம்:-**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் புகார்தாரர் /அசா.1 தனது முதன்மை சாட்சியத்தில் வீட்டில் இருந்தபோது சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபோது, அங்கு கூட்டமாக இருந்தது அதில் யாரோ என்னை அசிங்கமாக திட்டி, கொலை மிரட்டல் விடுத்தனர் என்று கூறியுள்ளாரே தவிர எதிரிகள் தான் அசிங்கமாக திட்டி, சொற்பகாயத்தை ஏற்படுத்தி கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று சாட்சியம் அளிக்கவில்லை. எனவே இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரிகள் மீதான குற்றங்கள் சந்தேகத்திற்கிடமின்றி மெய்பிக்கப்படவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**10) தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:-**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரிகள் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**தீர்வு**

**11)** இருதரப்பும் கேட்கப்பட்டது அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

**12)** இவ்வழக்கில் அ.சா.1 கொடுத்த புகாரில், பத்தி 2 ல் உள்ளவாறு சாட்சியமளிக்காமல், அசா.1 இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியம் அளிக்கும்போது, "நான் வீட்டில் இருந்தபோது சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபோது, அங்கு கூட்டமாக இருந்தது அதில் யாரோ என்னை அசிங்கமாக திட்டி, கொலை மிரட்டல் விடுத்தனர் என்றும் அந்த கூட்டத்தில் எதிரிகள் இருந்ததாலும், எதிரிகளுடன் இருந்த முன்விரோதம் காரணமாகவும், அங்கிருந்தவர்கள் சொன்னதன் பேரிலும், ஒரு அனுமானத்தின் எதிரிகள் மீது புதுநகர் காவல் நிலையத்தில் புகார் மனு அ.சா.ஆ.1 கொடுத்ததாகவும், பின்னர் விசாரித்ததில் எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்க்கும் எந்த சம்மந்தமில்லை என்று தெரிந்து வந்தது என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 தான் கொடுத்த புகாரினை ஊர்ஜிதம் செய்யாமல் அதற்கு மாறாக சாட்சியம் அளித்துள்ளார்.

**13)** அ.சா.1 எதிரிகளின் மீது கொடுத்த புகாரினை ஊர்ஜிதம் செய்யும் வகையில் மற்ற சாட்சிகள் யாரேனும் சாட்சியம் அளித்துள்ளார்களா என்று பார்க்கும்போது இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 தங்களது சாட்சியத்தில், இந்த வழக்கை

பற்றிய விவரம் ஏதும் தனக்கு தெரியாது என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 தனது முதன்மை சாட்சியத்தில் இந்த வழக்கை பற்றிய விவரம் ஏதும் தனக்கு தெரியாது என்றும், போலிசார் சம்மன் கொடுக்கும் போது தான் தனக்கு இந்த வழக்கை பற்றி தெரியும் என்றும், நீதிமன்றத்திதல் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்கள். அ.சா.1 கொடுத்த புகாரினை ஊர்ஜிதம் செய்யாமல் அதற்கு மாறாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**15)** அ.சா.1 எதிரிகளின் மீது கொடுத்த புகாரினை ஊர்ஜிதம் செய்யும் வகையில் மற்ற சாட்சிகள் யாரேனும் சாட்சியம் அளித்துள்ளார்களா என்று பார்க்கும்போது அரசு தரப்பில் யாரையும் விசாரிக்கவில்லை.

**16)** எனவே இவ்வழக்கின் எதிரிகள் தான் அ.சா.1 ஐ அசிங்கமாக திட்டி, சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று அ.சா.1 முதல் அசா.4 வரையான சாட்சிகள் சாட்சியம் அளிக்காத நிலையில், புலன் விசாரணை அதிகாரியான அசா.5-ன் சாட்சியத்தை மட்டும் வைத்து, எதிரிகளை குற்றத்தோடு தொடர்புபடுத்த இயலாது. மேலும் எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது. எனவே இவ்வழக்கின் எதிரிகள் அ.சா.1 ஐ அசிங்கமாக திட்டி, சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று அரசுத்தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**17)** முடிவாக, இவ்வழக்கில் 1 வது எதிரி இதச பிரிவு 294 (பி) ன் கீழும், 2 வது எதிரி இதச பிரிவுகள் 294 (பி), 342, 506(2) ன் கீழும், குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248 (1) Cr.P.C-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது

**18)** எதிரிகள் இவ்வழக்கில் எழுதிக்கொடுத்துள்ள பிணைபத்திரங்கள் வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

**19)** இவ்வழக்கில் வழக்கு சொத்து எண்.191 (A)/2026 -ல் கண்ட கத்தியின் முழுநீளம் 83 cm அதில் 73 cm மரககைப்பிடியுடன் கூடிய நீளமும் , 10 cm கத்தின் வளைந்த பாகம் அதில் மரக்கைப்பிடி 14cm அதில் இரும்பூன் 2 cm என்ற கத்தியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 28.07.2026 ந் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

BUVANESHKUMAR Digitally signed by BUVANESHKUMAR Date: 2026.07.28 17:43:30 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
கடலூர்.

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

அசா.1 திரு. அபிமன்யு

அசா.2 திரு.சந்திரசேகர்

அசா.3 திரு.வீரப்பன்

அசா.4 திருமதி. வெண்ணிலா

அசா.5 திரு. வடிவேல் ( சிறப்பு உதவி ஆய்வாளர்)

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அசா.ஆ.1 | 05.10.2022 | அசா.1 னின் கையொப்பத்துடன் கூடிய புகார் மனு |
| அசா.ஆ.2 | 05.10.2022 | முதல் தகவல் அறிக்கை |
| அசா.ஆ.3 | 05.10.2022 | பார்வை மகசர் |
| அசா.ஆ.4 | 05.10.2022 | மாதிரி வரைபடம் |
| அசா.ஆ.5 | 05.10.2022 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அசா.ஆ.6 | 05.10.2022 | கைப்பற்றுதல் மகசர் |

**அரசு தரப்பு சான்றுபொருள் -இல்லை**

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றுபொருள் - இல்லை**

BUVANESHKUMAR Digitally signed by BUVANESHKUMAR Date: 2026.07.28 17:43:35 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
கடலூர்.

**குறிப்பு**

1. விசாரணையின் போது எதிரி  பிணையில் இருந்தார்.

2. எந்தவொரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**நகல்**

1. மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர், கடலூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**CC. No.73/2025**
**நாள்: 13.07.2026**

**தீர்ப்புரை**

எதிரிகள் ஆஜர் திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்பு பகரப்பட்டது. முடிவாக, இவ்வழக்கில் 1 வது எதிரி இதச பிரிவு 294 (பி) ன் கீழும், 2 வது எதிரி இதச பிரிவுகள் 294 (பி), 342, 506(2) ன் கீழும், குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248 (1) Cr.P.C-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கில் வழக்கு சொத்து எண்.191 (A)/2026 -ல் கண்ட கத்தியின் முழுநீளம் 83 cm அதில் 73 cm மரகைப்பிடியுடன் கூடிய நீளமும் , 10 cm கத்தின் வளைந்த பாகம் அதில் மரக்கைப்பிடி 14cm அதில் இரும்பூன் 2 cm என்ற கத்தியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

நீதித்துறை நடுவர் எண்.2
கடலூர்.